பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

16 08 2024 **FRIDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2. கடலோர ஒத்துழைப்பை மேலும் சுமூகமான சூழலுடன் மேம்படுத்த இந்தியாவும் - வியட்நாமும் முடிவு செய்துள்ளன.

3. மருத்துவக்கல்வி நிறுவனங்களில் வன்முறை ஏற்படும் பட்சத்தில் ஆறு மணிநேரத்திற்குள் புகார் அளிக்க வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

4. பங்களாதேஷில் உள்ள சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு முகமது யூனுஸ் கூறியுள்ளார்.

5. பாரிஸ் பராலிம்பிக் போட்டியில் கேலோ இந்தியா உள்ளிட்ட திட்டங்களின்கீழ் பயிற்சி பெற்ற 50 வீரர்கள் பங்கேற்பதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>>

ஹரியானா மற்றும் ஜம்முகாஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், ஹரியானா மாநிலத்தில் அக்டோபர் ஒன்றாம் தேதி ஒரே கட்டமாகவும், ஜம்மு காஷ்மீருக்கு அடுத்தமாதம் 18, 25, மற்றும் அக்டோபர் ஒன்றாம் தேதி என மூன்று கட்டங்களாகவும் வாக்குப்பதிவு நடைபெறும் என்று தெரிவித்தார்.

வாக்கு எண்ணிக்கை அக்டோபர் நான்காம் தேதி நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் 90 உறுப்பினர்களை கொண்ட சட்டப்பேரவைக்கு 87 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

அங்கு 11 ஆயிரத்து 800 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

ஹரியானாவை பொறுத்தவரை 2 கோடி வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளதாகவும், 20 ஆயிரம் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட இருப்பதாகவும் திரு ராஜீவ்குமார் கூறினார்.

<<<<<<>>>>>

கடலோர ஒத்துழைப்பை மேலும் சுமூகமான சூழலுடன் மேம்படுத்த இந்தியாவும் - வியட்நாமும் முடிவு செய்துள்ளன.

நான்காவது இந்தியா – வியட்நாம் கடலோர பாதுகாப்பு பேச்சுவார்த்தை ஹனோய் நகரில் நடைபெற்றது.

இந்த பேச்சுவார்த்தையின்போது கடலோர பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஒத்துழைப்பு உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

சர்வதேச மற்றும் மண்டல அளவிலான பிரச்சினைகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது என முடிவு செய்யப்பட்டதாகவும் கடலோர அறிவியல் ஆராய்ச்சி, பேரிடர் நிவாரணம், கடலோர பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட விஷயங்களும் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மருத்துவக்கல்வி நிறுவனங்களில் வன்முறை ஏற்படும் பட்சத்தில் ஆறு மணிநேரத்திற்குள் புகார் அளிக்க வேண்டும் என்று மத்திய சுகாதார அமைச்சகம், அனைத்து மருத்துவக்கல்வி நிறுவனங்களையும் அறிவுறுத்தியுள்ளது.

சுகாதார சேவைகளுக்கான தலைமை இயக்குனர் திரு அதுல் கோயல், அனைத்து மத்திய அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ கல்லூரிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அரசு மருத்துவர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் அண்மை காலமாக அதிகரித்து வருவது தெரியவந்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பணியில் இருக்கும்போது அதுபோன்ற சம்பவங்கள் ஏற்படும்பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுக்கு இருப்பதாகவும் திரு அதுல் கோயல் குறிப்பிட்டுள்ளார்.

கொல்கத்தாவில் அண்மையில் முதுநிலை மருத்துவ மாணவி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் **EOS-08,** வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டிருப்பதற்கு, இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறைந்த செலவிலான இந்த ராக்கெட் விண்வெளி ஆய்வுப்பணிகளில் முக்கிய பங்கு வகிப்பதோடு, தனியார் தொழில்துறையினரையும் ஊக்குவிக்கும் என்று அவர் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரோவின் சாதனையில் குறிப்பிடத்தக்க மைல்கல் இது என்றும், இதற்காக இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி அதில் கூறியுள்ளார்.

முன்னதாக, இன்று காலை ஸ்ரீஹரிகோட்டாவின் சத்திஷ்தவன் விண்வெளி மையத்திலிருந்து **EOS-08** உட்பட மூன்று சிறிய ரக செயற்கை கோள்களும் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டன.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு சோம்நாத், ஆளில்லா ககன்யான் விண்கலம் சோதனை வரும் டிசம்பரில் நடைபெறும் என்றும், தூத்துக்குடி மாவட்டம் குலசேகரபட்டிணத்தில் அமைக்கப்பட்டுவரும் விண்வெளி ஏவுதளம் இரண்டாண்டுகளில் நிறைவடையும் என்றும் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

பொதுத்துறை ஒளிபரப்பு நிறுவனமான பிரசார் பாரதியும், சன்சத் தொலைக்காட்சியும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளன.

சன்சத் தொலைக்காட்சி தலைமை செயல் அதிகாரி திரு **Ranjit Punhani** -யும், பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு **Gaurav Dwivedi** –யும் ஒப்பந்தத்தை பரிமாறிக்கொண்டனர்.

பணியாளர்களை பகிர்ந்துகொள்ளுதல், பயிற்சி அளித்தல், பரஸ்பரம் நிகழ்ச்சிகளை முன்னிலைப்படுத்திக் கொள்ளுதல் போன்றவற்றுக்கு இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வகை செய்கிறது.

இதுகுறித்து பேசிய திரு **Gaurav Dwivedi**, பிரசார் பாரதியின் ஓ டி டி தளத்தில் சன்சத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதுடன், பயிற்சி வசதிகளை பயன்படுத்திக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

**<<<<<<>>>>>**

2022-ஆம் ஆண்டுக்கான தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. “காந்தாரா” படத்தில் நடித்த கன்னட நடிகர் ரிஷப் ஷெட்டி சிறந்த நடிகருக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

“திருச்சிற்றம்பலம்” படத்தில் நடித்த நித்யாமேனன், “கட்ச் எக்ஸ்பிரஸ்” குஜராத்தி படத்தில் நடித்த மானசி பரேக் ஆகியோர் சிறந்த நடிகைக்கான விருதை பகிர்ந்துகொள்கிறார்கள். திருச்சிற்றம்பலம் படத்தில் இடம்பெற்ற “மேகம் கருக்காதா” பாடலுக்கு நடனம் அமைத்த ஜானி மாஸ்டர், சத்தீஷ் கிருஷ்ணன் ஆகியோர் சிறந்த நடன ஆசிரியருக்கான விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிறந்த தமிழ் திரைப்படமாக பொன்னியின் செல்வன் பாகம்-1 தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதேபடத்திற்கு பின்னணி இசைக்காக ஏ ஆர் ரகுமானும், ஒளிப்பதிவுக்காக ரவி வர்மாவும், ஒலி அமைப்பாளருக்காக ஆனந்த் கிருஷ்ணமூர்த்தியும், தேர்வு செய்யப்பட்டுள்ளனர். சிறந்த பின்னணி பாடகியாக பாம்பே ஜெயஸ்ரீ தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**<<<<<<>>>>>**

பங்களாதேஷில் உள்ள இந்துக்கள் உள்ளிட்ட அனைத்து சிறுபான்மையினரின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் என்று அந்நாட்டு இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு முகமது யூனுஸ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியை, தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

சிறுபான்மையினரின் பாதுகாப்பு மற்றும் தற்போது பங்களாதேஷில் நிலவும் சூழல் உள்ளிட்டவை குறித்து அப்போது திரு யூனுஸ் விவரித்தார்.

பங்களாதேஷில் ஜனநாயக மற்றும் அமைதி ஸ்திரத்தன்மையுடன் கூடிய அரசு உருவாக, இந்தியா தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்று அப்போது பிரதமர் திரு நரேந்திர மோடி உறுதி அளித்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

மேற்காசியாவில் நிலவும் தற்போதைய சூழல் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடியும், இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேத்தன்யாகு-வும் ஆலோசனை நடத்தினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடியை, இஸ்ரேல் பிரதமர் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

மேற்காசிய பகுதியில் பதற்றத்தை தணிக்க வேண்டியது அவசியம் என்றும், அமைதி பேச்சுவார்த்தை மூலம் பாலஸ்தீனத்துடனான போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி அப்போது வலியுறுத்தினார்.

மேலும், இஸ்ரேல் உடனான நல்லுறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாகவும் பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

<<<<<<>>>>>

“நீடித்த எதிர்காலத்திற்கு அதிகாரம் பெற்ற தெற்காசிய நாடுகள்” என்ற கருப்பொருளுடன் மூன்றாவது உலக தெற்காசிய உச்சிமாநாடு காணொலி மூலம் நாளை நடைபெறவுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக அனைத்து தெற்காசிய நாடுகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

உலக அளவில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் சவால்கள், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு சிக்கல்கள், பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>

சிரியாவுக்கு புற்றுநோய் தடுப்பு மாத்திரைகள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சிரியாவுக்கு அனுப்பப்பட்டுள்ள ஆயிரத்து 400 கிலோ புற்றுநோய் தடுப்பு மாத்திரைகள் மூலம், புற்றுநோயை முறியடிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

ஃபிஜி தீவுகளில் இன்று மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

கடலுக்கு அடியில் 29 கிலோமீட்டர் ஆழத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் ஐந்து புள்ளி ஒன்றாக பதிவானது.

இதுவரை உயிரிழப்போ, சேதமோ ஏற்பட்டதாக எந்த தகவலும் இல்லை என்று ஃபிஜி அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மத்திய அரசின் ஒலிம்பிக் பயிற்சி இலக்கு திட்டத்தின்கீழ், பாரிஸ் பராலிம்பிக் போட்டியில் 50 வீரர்கள் பங்கேற்க இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

பாராலிம்பிக் போட்டிகள் இம்மாதம் 28-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 8-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.

இப்போட்டியில், இந்தியா சார்பில் 47 தடகள வீரர்கள் உட்பட மொத்தம் 84 பேர் பங்கேற்கின்றனர்.

இந்திய வீரர்களை பாராலிம்பிக் போட்டிக்கு அனுப்பிவைக்கும் நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா, மத்திய அரசு அளித்த பயிற்சியின் காரணமாக 50 பேர் பயனடைந்து, தற்போது இந்த போட்டியில் பங்கேற்க இருப்பதாக தெரிவித்தார்.

அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளையும் மத்திய அரசு செய்து கொடுத்ததாகவும், கேலோ இந்தியா விளையாட்டுப் போட்டிகள் மூலம் பலர் இதற்கு தகுதி பெற்றதாகவும் திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்திய 'ஏ' மகளிர் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ஆஸ்திரேலியா "ஏ" மகளிர் அணி எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலியாவின் **'Mackay'**-யில் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் விளையாடிய இந்திய ஏ அணி, 48 ஓவரில் 218 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

219 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ஆஸ்திரேலியா ஏ அணி, 40 புள்ளி இரண்டு ஓவரில் இரண்டு விக்கெட்டை மட்டுமே இழந்து 221 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>